நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## DVC. No.2/2017

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மதுவந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | ரங்கசாமி |
| கிராமம் | : | மேட்டூர், இந்திராகாந்தி காலனி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 30 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிர்மனுதாரர் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–03.00 PM )

1. நான் திருமணத்தின்போது KSR பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளமோ படித்து வந்தேன். திருமணத்திற்கு பின்னிட்டும் நான் தொடர்ந்து படித்து வந்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு 6 மாதம் எனது அம்மா வீட்டில் தங்கி படித்து வந்தேன் என்றால் சரிதான். திருமணம் முடிந்த பிறகு 10 நாட்கள் எனது

மாமனார் மாமியார் வீட்டில் இருந்தோம். கோவையில் 6 மாதம் தனியாக குடும்பம் நடத்தி வந்தோம்.

2. திருமணம் முடிந்து 5 மாதம் கழித்து கோவையில் தனிக்குடித்தனம் இருந்தோம். அதுவரை எனது பெற்றோர் வீட்டில்தான் இருந்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வீட்டுக்கு போகவர இருந்தேன். கோவையில் தனிக்குடித்தனம் சென்றபிறகு 15 நாட்களில் எனது கணவர் கன்னியாகுமரிக்கு பயிற்சிக்காக சென்றுவிட்டார் என்றால் சரிதான். கன்னியாகுமரியில் 21 நாட்கள் பயிற்சியில் இருந்தார். 21 நாள் எனது கணவர் பயிற்சியில் இருந்தபோது எனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில்தான் நான் கர்பமாக இருந்தேன் என்றால் ஆமாம்.

3. நான் கர்ப்பமாக இருந்த விசயத்தை எனது கணவருக்கு நான் தான் சொன்னேன். நான் கர்ப்பமாக இருந்த விசயத்தை எனது மாமனார் மாமியாருக்கு சொல்ல வேண்டாம் என்று எனது கணவரிடம் நான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. விபரம் தெரிந்ததும் எனது அப்பா எனது மாமனார் மாமியாருக்கு தகவல் சொல்லிவிட்டார்.

4. எனது பிரமாண பத்திரிக்கையில் எனது கணவர் முதுகில் எட்டி உதைத்து அடித்து கொடுமைப்படுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனால் காயங்கள் ஏதேனும் ஏற்பட்டதா என்றால் காயம் ஏற்படவில்லை. அந்த சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. என் கணவர் அடித்ததாக நான் சொல்லும் சம்பவம் கோவையில் நடந்தது. அந்த சமயத்தில் மேற்படி அடித்தது சம்மந்தமாக நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெறவில்லை. நான் அதன் பிறகும் கோவையிலேயே இருந்துவிட்டேன் என்றால் சரிதான்.

5. பிரமாண பத்திரிக்கையில் எனது பெற்றோர் வீட்டில் இருந்து அழைத்துச்செல்ல பஞ்சாயத்தார்கள் வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் யார் என்றால் என் கணவரின் தங்கையின் கொளுந்தியா கணவர் செல்வம், அந்த செல்வத்தின் தங்கை கணவர் ரவி, என் கணவர் ரங்கசாமி ஆகியோர் வந்தார்கள். அந்த விபரத்தை நான் பிரமாண பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. உண்மையில் மேற்படி எனது கணவரை தவிர மற்ற 2 நபர்கள் அங்கு வரவில்லை என்றாலும், எனது கணவர் மட்டும்தான் என்னை சமாதானம் செய்து அழைத்துச்செல்ல வந்தார் என்றாலும் சரியல்ல. மூன்று நபர்களும் தான் வந்தார்கள்.
7. எனது கணவர் பொள்ளாச்சியில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். நான் கோவையில் தனிக்குடித்தனம் இருந்தபோது பொள்ளாச்சியிலும், கருமத்தாம்பட்டியிலும் எனது கணவர் பணிபுரிந்தார். வழக்கமாக எனது கணவர் காலை 09.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாலை 06.30 மணிக்கு வீட்டிற்கு வருவார்.
8. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் கடந்த 01.02.2016 ம் தேதி எனது கணவர் குடும்பத்தார் எனது பெற்றோர் வீட்டிற்கு பஞ்சாயத்திற்கு வந்து பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல.
9. அதன்பிறகு கேரளாவிற்கு பணிமாறுதல் ஆகி எனது கணவர் சென்றார் என்றால் போனாரா என்று எனக்கு தெரியாது. கேரளாவிற்கு பணிமாறுதல் ஆகிவிட்டதாக என்னிடம் சொன்னார். கேரளாவில் எத்தனை நாட்கள் பணியில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. கேரளாவிற்கு பணிமாறுதல் ஆகி செல்லும்போது என்னையும் உடன் அழைத்து செல்வதாக எனது கணவர் கேட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் கேரளாவிற்கு சென்ற பின்னிட்டு நான் அவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். திருமணம் நடைபெற்று 10 மாதங்கள் கழித்து எனது கணவர் கேரளாவிற்கு வேலைக்கு சென்றார்.இதுவரை மீண்டும் நாங்கள் சேர்ந்து வாழவில்லை.
10. உண்மையில் எனது கணவர் கேரளாவிற்கு வேலைக்கு செல்லும்போது என்னையும் தன்னுடன் வரச்சொன்னார் என்றாலும் நான் தான் மறுத்துவிட்டு திரும்ப நான் கோவைக்கு வந்து திருமணத்தின்போது எனக்கு போடப்பட்ட நகைகளை திரும்ப எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. திருமணத்தின்போது போடப்பட்ட நகைகள் ஏற்கனவே என்வசம் தான் இருந்தது.

11. எனது கணவர் கடந்த 07.04.2016 ம் தேதி விவாகரத்து வழக்கு தொடுப்பதற்காக அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு நான் இதுவரை பதில் அனுப்பவில்லை என்றால் சரிதான். எனது கணவருடன் சேர்ந்து வாழ உத்தரவிடவேண்டி நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

12. கடந்த 16.08.2016 ம் தேதி சேலம் சமூக நலத்துறையில் எனது கணவருக்கு எதிராக புகார் கொடுக்கவில்லை. எனக்கும், எனது கணவருக்கும் குழந்தை சம்மந்தமாக மேச்சேரியில் நடைபெற்ற பிரச்சனையை ரோந்து காவல் துறையினர் கண்டறிந்து அவர்கள் விசாரணைக்காக மேட்டுர் மகளிர் காவல் நிலையத்திற்கு எங்களை அனுப்பி வைத்தார்கள். அதுசம்மந்தமாக விசாரிக்கதான் மேட்டுர் மகளிர் காவல் நிலையத்திலிருந்து சமூக நலத்துறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

13. மேச்சேரியில் பிரச்சனை நடைபெற்ற தேதி எனக்கு சரியாக நினைவில்லை. விவாகரத்து வழக்கு பதிவுசெய்யப்பட்ட பிறகு தான் எனக்கு குழந்தை பிறந்தது என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த தகவலை குழந்தை பிறந்தவுடன் எனது பாட்டி எனது கணவருக்கு சொன்னார். குழந்தை பிறந்த பின்பு எனது கணவர் குழந்தையை பார்க்க வந்தார் என்றால் சரிதான். அப்போது பிரச்சனை எதுவும் ஏற்படவில்லை.

14. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் குழந்தை பிறந்த பின்னிட்டு மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என்னை எனது கணவருடன் சேர்ந்து வாழவைக்க கேட்டு புகார் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அப்போது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்தவர்கள் அரூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சொல்லி அறிவுறுத்தியதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதன்படி நான் அரூர் காவல்நிலையம் சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை.

15. மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரை நான் கைப்பட எழுதிக்கொடுத்திருந்தேன். அந்த புகாரை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறான சம்பவமே நடக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி புகார் கொடுத்த பின்னிட்டுதான் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறேன் என்று விவாகரத்து மனு தாக்கல் செய்தார்கள்.

16. எனது பிரமாண பத்திரத்தில் அரூரிலிருந்து மேட்டுர் வரும்போது எனது கணவர் அடித்து துன்புறுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சம்பவத்தை பொருத்துதான் ரோந்து படையினர் பார்த்து மேற்படி மேட்டுர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதுக்குறித்து போலீசார் விசாரணை செய்தார்கள். விசாரணை செய்துதான் திருமணத்தின்போது எனது கணவருக்கு எனது பெற்றோர் வாங்கிக்கொடுத்த பைக்கை போலீசார் திரும்ப பெற்று கொடுத்தார்கள். எனது கணவருடைய மாற்றுசான்றிதழ் மற்றும் ஆதார் அட்டை, மதிப்பெண் சான்றிதழ் ஆகியவற்றை வாங்கி கொடுத்துவிட்டு மற்ற பிரச்சனைகளை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொல்லி அனுப்பி வைத்தார்கள்.

17. அந்த சம்பவம் குறித்து தான் சமூக நலத்துறையினர் விசாரித்தார்களா என்றால் ஆமாம். சமூக நலத்துறையில் நடைபெற்ற விசாரணை தொடர்பாக இன்றளவும் எந்த வழக்கும் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். சமூக நலத்துறையில் நான் கொடுத்த புகார் என்ன ஆனது என்பது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இந்த மனுவை நான் தனிப்பட்ட முறையில் எனது வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

18. சமூக நலத்துறையில் நடைபெற்ற விசாரணையில் எனது கணவருக்கு எதிராக உரிய முகாந்திரம் இருந்திருந்தால் அவர்களே இந்த நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் அங்கு சென்று விசாரணைக்காக மதியம் வரை காத்திருந்தேன். எனது கணவர் 12.45 மணிக்குதான் வந்தார். அதனால் விசாரணை செய்யாமல் அனுப்பி வைத்தார்கள். அந்த விபரத்தை இந்த மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

19. எனது கணவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து CC–362/2025 என்ற எண்ணில் குற்ற வழக்கு நிலுவையில் உள்ளதென்றால் சரிதான். எனது கணவர் மாதம் ரூ.50,000/– சம்பாதித்து வருகிறார் என்பதற்கும், 4 ஏக்கர் நிலம் எனது கணவர் பெயரில் உள்ளதென்பதிற்கும் எந்த ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

20. தற்போது மேட்டுர் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு எதிராக செல்போன் கடை சொந்தமாக வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்போன் சம்மந்தப்பட்ட பொருட்கள் விற்கும் கடை வைத்துள்ளேன். அதேபோல் பாரத ஸ்டேட் வங்கியில்

கலெக்சன் ஏஜெண்டாக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது ஆதார் அட்டையை நான் இந்த வழக்கில் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து முழுமையாக 8 மாதங்கள் கூட எனது கணவருடன் ஒன்றாக வசிக்கவில்லை என்றாலும், அவ்வாறு இருக்கையில் எனது கணவர் நான் சொன்னவாறு எந்த கொடுமையும் செய்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.

21. கோவையில் இருந்தபோது எனது கணவர் நீண்ட நாட்களுக்கு வெளியூருக்கு வேலைக்கு சென்றுவிட்டார் என்றாலும், என்னுடன் அதிக நாட்கள் ஒன்றாக இருக்கவில்லை என்றாலும், அவ்வாறு இருக்கையில் எனது கணவர் நான் சொன்னவாறு எந்த கொடுமையும் செய்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.

22. எனது கணவர் வேலைக்கு சென்ற பிறகு நான் தனியாக எனது பெற்றோர் வீட்டிற்கு வருவேன் என்றால் சரியல்ல. நான் பெற்றோர் வீட்டுக்கு விடுமுறை நாட்களில் நானும், எனது கணவரும்தான் வருவோம். திருமணத்தின்போது போடப்பட்ட நகைகள், சீர்வரிசை பொருட்களை என்வசம் வைத்துக்கொண்டு பொய்யான புகார்களை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

23. நான் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள எந்த கொடுமைகளையும் எனது கணவர் எனக்கு செய்யவில்லை என்றாலும், அதனால் நான் எனது மனுவில் குறிப்பிட்டுள்ள எந்த பரிகாரங்களும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-03.50 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**